


ISSN: 2582–5518

# புதுகை வரலாறு நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351




செவ்வாய் ❖ ஜனவரி. 23, 2024 சென்னை & புதுக்கோட்டை 4 பக்கம் ❖ வரலாறு 9 ❖ இதழ் 107 ❖ ரூ.10

## அயோத்தி கும்பாபிஷேகம்: ராமர் நிச்சயமாக மன்னிப்பார்

# நம்பிக்கை

## பல நூற்றாண்டு காத்திருப்புக்குப் பின் பகவான் ராமர் அயோத்திக்கு வந்துவிட்டார்

# அயோத்தி கோயிலை திறந்து வைத்த பிரதமர் மோடி பேச்சு





அயோத்தி, ஜன. 23–

**"பல நூற்றாண்டு காத்திருப்புக்குப் பின் பகவான்ராமர் அயோத்திக்கு வந்துவிட்டார்" என்று ராமர் கோயிலை திறந்து வைத்த பிரதமர் நரேந்திர மோடி பேசினார்.**

அயோத்தி ராமர் கோயில் பிராண பிரதிஷ்டை விழாவுக்குப் பிறகு கோயிலில் கூடி இருந்த பக்தர்கள் மத்தியில் பிரதமர் நரேந்திர மோடி, உத்தரப் பிரதேச முதல்வர் யோகி ஆதித்யாநாத், ஆர்எஸ்எஸ் தலைவர் மோகன் பாகவத் ஆகியோர் உரையாற்றினர். பிரதமர் மோடி பேசும்போது, "பல நூற்றாண்டு காத்திருப்புக்குப் பின் பகவான் ராமர் வந்துவிட்டார். பல நூற்றாண்டுகளாக நாம் காட்டிய பொறுமை, செய்த தியாகம் காரணமாக இறுதியாக ராமர் வந்துவிட்டார். தற்போது ராமர் சிறிய குடிசையில் இல்லை. மிக பிரம்மாண்டமான கோயிலில் அவர் இருப்பார்.

இந்த தருணத்தில் பகவான் ராமரிடம் நான் மன்னிப்புக்கோருகிறேன். இந்தப் பணி சில நூற்றாண்டுகளுக்கு முன்பே நிகழ்ந்திருக்க வேண்டும். நமது முயற்சி, தியாகம், தவத்தில் இருந்த குறைபாடு காரணமாக அது நிகழாமல் போய்விட்டது. தற்போது அனைத்துப் பணிகளும் நிறைவடைந்துவிட்டன. நிச்சயமாகபகவான்ராமர் நம்மை மன்னிப்பார் என நம்புகிறேன். பகவான் ராமருக்கு ஆலயம் அமைப்பதற்கான சட்டப் போராட்டம் பல பத்தாண்டுகளாக நடைபெற்றது. இந்திய நீதித் துறை நீதி வழங்கியதற்காக நான் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

ராமர் தனது காலத்தில் 14 ஆண்டுகள் வனவாசம் அனுபவித்தார். ஆனால், இந்த காலத்தில் அயோத்தியும் நாட்டு மக்களும் பலநூறு ஆண்டு கால பிரிவை அனுபவித்துவிட்டனர். இதனால், நமது பல தலைமுறைகள் மிகவும் வருந்தின. இந்த வரலாற்று சிறப்பு மிக்க தருணத்தை உலகம் முழுவதும் உள்ள ராம பக்தர்கள் மிகுந்த உற்சாகத்துடன் அனுபவித்திருப்பார்கள் என நான் உறுதியாக நம்புகிறேன். இந்த தருணம் புனிதமானது; தெய்வீகமானது.

ராமர் கோயில் பிராண பிரதிஷ்டையை முன்னிட்டு நாட்டின் பல்வேறு புனிதத் தலங்களுக்கு நான் சென்று வந்தேன். கடல் முதல் சரயு நதி வரை எல்லா இடங்களிலும் ராம பக்தி பிரவாகம் இருந்ததைப் பார்க்க முடிந்தது. மக்களிடையே பண்டிகை உணர்வை காண முடிந்தது. அயோத்தியில் ராமர் கோயில் அமைப்பதற்கான முயற்சி குறித்து குறித்து சில காலங்களுக்கு முன் சிலர் ஏளனம் செய்தனர். அவர்களால், இந்திய சமூக உணர்வின் தூய்மையை புரிந்து கொள்ள முடியவில்லை. இந்திய சமூகத்தின் அமைதி, பொறுமை, பரஸ்பர நல்லிணக்கம், ஒற்றுமை ஆகியவற்றின் அடையாளமாக இங்கு ராமர் வீற்றிருக்கிறார்.

இந்த நாள் சாதாரணமான மற்றுமொரு நாள் அல்ல. இது காலச்சக்கரத்தின் புதிய துவக்கம். நாடு முழுவதும் ராமபிரானின் இந்த புனித தினம் கொண்டாடப்பட்டு வருகிறது. பண்டைய காலத்திலிருந்து ராமபிரானின் நினைவு நம் இதயத்தில் நிரந்தரமாக இருந்து வருகிறது. இந்த ஆலயம் நமக்கு மிக முக்கியமானதாகும். நமக்கு உத்வேகம் அளிப்பதற்காக இந்த ஆலயம் உருவாகி உள்ளது. ராமபிரான் அனைவருக்கும் பொதுவானவர். இந்த ஆலயம் இந்தியாவின் முன்னேற்றத்துக்கான அடையாளம். இந்த புண்ணியமான தருணத்தை என்றென்றும் நாம் நினைவில் கொள்ள வேண்டும். நாட்டின் இளைஞர்கள் பல ஆண்டுகால வரலாற்றிலிருந்து உத்வேகம்பெறவேண்டும்" என தெரிவித்தார்.



▶ நேற்று சென்னை, மெரினா கடற்கரை, காமராசர் சாலை, உழைப்பாளர் சிலை அருகில் குடியரசு தின விழாவையொட்டி இரண்டாம் ஒத்திகை நிகழ்ச்சி நடைபெற்றது.

## ராமர் கோயில் கும்பாபிஷேக நேரலை

# காஞ்சிபுரம் காமாட்சி அம்மன் கோயிலில் எல்இடி திரை அகற்றம்: நிர்மலா சீதாராமன் கண்டனம்



காஞ்சிபுரம், ஜன, 23–

ராமர் கோயில் கும்பாபிஷேகத்தை நேரலையில் ஒளிபரப்புவதற்காக காஞ்சிபுரம் காமாட்சி அம்மன் கோயிலில் வைக்கப்பட்டிருந்த எல்இடி திரையை போலீஸார் அகற்றியதற்கு மத்திய அமைச்சர் நிர்மலா சீதாராமன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

அயோத்தியில் நடைபெறும் கும்பாபிஷேகம் உலகெங்கும் நேரலையில் ஒளிபரப்பு செய்யப்படுகிறது. மத்திய அமைச்சர்கள் அயோத்திக்கு நேரில் வராமல் பல்வேறு பகுதிகளுக்கும் நேரில் சென்று மக்களுடன் அமர்ந்து கும்பாபிஷேகத்தை நேரலையில் தரிசிக்க வேண்டும், பூஜைகளில் பங்கேற்க வேண்டும் என்று பிரதமர் நரேந்திர மோடி உத்தரவிட்டிருந்தார்.

அதன்படி மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் பொதுமக்களுடன் பங்கேற்று கும்பாபிஷேகத்தைக் காண காஞ்சிபுரம் காமாட்சி அம்மன் கோயிலில் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தது. அங்கு அவர் மக்களுடன் அமர்ந்து காணும் வகையில் பெரிய எல்இடி திரை பொருத்தப் பட்டிருந்தது.

இந்நிலையில் நேற்று காலை அங்கு வந்த காஞ்சிபுரம் போலீஸார், அனுமதியின்றி எல்இடி திரை பொருத்தப் பட்டிருப்பதாகக்கூறி அதை அகற்றினர். இதனால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது.

முன்னதாக தமிழக கோயில்களில் சிறப்பு பூஜைகளை நடத்த விடாமல் அரசு தடுப்பதாக பாஜக விமர்சனம் செய்திருந்தது. மத்திய அமைச்சர் நிர்மலா சீதாராமனும் கண்டனம் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் காஞ்சிபுரம் காமாட்சி அம்மன் கோயிலில் அவர் பங்கேற்கும் நிகழ்ச்சியில் வைக்கப்பட்டிருந்த திரை அகற்றப்பட்டதற்கு அவர் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். இந்து விரோத திமுக, இந்து மக்களுக்கு எதிரான செயல்களைச் செய்கிறது என்று அவர் குற்றம் சாட்டினார். இந்த இந்து விரோத, வெறுக்கத்தக்க செயலை வன்மையாக கண்டிக்கிறேன் என்று அவர் கூறியுள்ளார்.

இது குறித்து காஞ்சிபுரம் காவல்துறை தரப்பில் விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது. கோயிலில் நேரலை நிகழ்ச்சிகள் எதுவும் நடைபெறாது என்று அனுமதி பெறும்போது கூறப்பட்டிருந்ததாகவும் அதை மீறி திரை வைக்கப்பட்டிருந்ததால் அது அகற்றப் பட்டுள்ளதாகவும் காவல் துறை தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# செந்தில் பாலாஜி, ஜாமின் கோரி மீண்டும் சென்னை ஐகோர்ட்டில் மனு



சென்னை, ஜன, 23

சட்ட விரோத பணப்பரிமாற்ற வழக்கில் கடந்தஆண்டுஜூன்மாதம் 14-ந்தேதி அமைச்சர் செந்தில் பாலாஜி அமலாக்கத்துறை அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார். அவரது ஜாமின் மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்ட நிலையில், தற்போது அமைச்சர் செந்தில்பாலாஜி புழல் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

இதற்கிடையில், செந்தில் பாலாஜியின் நீதிமன்றக் காவல் 16-வது முறையாக நீட்டிக்கப்பட்டுள்ளது. செந்தில் பாலாஜியின் நீதிமன்றக் காவலை வரும் 29 ஆம் தேதி வரை நீட்டித்து நீதிபதி அல்லி நேற்று உத்தரவிட்டார். இந்த நிலையில், அமைச்சர் செந்தில் பாலாஜி, ஜாமின் கோரி சென்னை ஐகோர்ட்டில் 2-வது முறையாக மனு தாக்கல் செய்துள்ளார். அந்த மனுவில், வழக்கில் ஆவணங்கள் மாற்றியமைக்கப்பட்டது விசாரணையில் தான் தெரியவரும் என்று முதன்மை அமர்வு நீதிமன்றம் கூறியது தவறு என்றும், ஆவணங்கள் மாற்றியமைக்கப்பட்டது சந்தர்ப்ப சூழ்நிலை மாற்றமாககருதவேண்டும் என்றும்தெரிவித்துள்ளார். இந்த மனு விரைவில் விசாரணைக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# அறக்கட்டளை நிர்வாகிக்கு முன்ஜாமின் மறுப்பு: தற்காலிக ஆசிரியர் நியமன மோசடி புகாரை பள்ளிக் கல்வி இயக்குநர் விசாரிக்க உத்தரவு



மதுரை , ஜன, 23–

தென் மாவட்டங்களில் நடைபெற்ற தற்காலிக ஆசிரியர் நியமன மோசடி வழக்கில் தலைமறைவாக இருந்து வரும் அறக்கட்டளை நிர்வாகியின் முன்ஜாமீன் மனுவை தள்ளுபடி செய்து, மோசடி குறித்து பள்ளிக் கல்வி இயக்குநர் விசாரிக்க உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தூத்துக்குடி மாவட்டம் ஆறுமுகநேரியைச் சேர்ந்த பாலகுமரேசன். இவர் ஆதவா அறக்கட்டளை நடத்தி வந்தார். அரசு பள்ளிகளில் தற்காலிக ஆசிரியர்கள், பணியாளர்கள் நியமனம் தொடர்பாக அரசும், அறக்கட்டளை இடையே ஒப்பந்தம் போட்டிருப்பதாக கூறி, பலரிடம் ரூ.3 முதல் ரூ.5 லட்சம் வரை பணம் வசூலித்து மோசடி செய்ததாக சண்முக லெட்சுமி என்பவர் தூத்துக்குடி மாவட்ட குற்றப்பிரிவு போலீஸில் புகார் அளித்தார்.

அந்தப் புகாரில் தற்காலிக ஆசிரியர் பணி வழங்குவதாக ரூ.5 லட்சம் வாங்கினர். அதன் பிறகு ஒட்டப்பிடாரம் பள்ளியில் தற்காலிக ஆசிரியராக நியமித்தனர். ஆனால் சம்பளம் வரவில்லை. நேரில் பார்த்து கேட்டும் சம்பளம் தரவில்லை. என்னைப்போல் பலரிடம் லட்சக்கணக்கில் பணம் வசூலித்து மோசடி செய்துள்ளனர் எனக் கூறப்பட்டிருந்தது. இப்புகாரின் போலீஸார் பாலகுமரேசன், பிரசாத், குணம் ஆகியோர் மீது வழக்கு பதிவு செய்தனர்.

இந்தவழக்கில்முன்ஜாமீன் கோரி பாலகுமரேசன் உயர் நீதிமன்ற கிளையில் மனு தாக்கல் செய்தார். அதில், 'மாவட்டங்களில் அரசு பள்ளி கட்டிடங்களை பராமரிக்கவும், தற்காலிக ஆசிரியர்கள், பணியாளர்கள் நியமனம் தொடர்பாக அரசுக்கும் ஆதவா அறக்கட்டளைக்கும் இடையே ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளது. மனுதாரருக்கு மாதச்சம்பளம் வழங்கப்பட்டது. பின்னர் உடல் நலக்குறைவு ஏற்பட்டதால் சம்பளம் வழங்கவில்லை. அரசிடம் இருந்து நிதியும் வரவில்லை. இதனால் முன்ஜாமீன் வழங்க வேண்டும்' எனக் கூறியிருந்தார்.

இந்த மனு நீதிபதி தண்டபாணி முன்பு விசாரணைக்கு வந்தது. அரசு சார்பில் கூடுதல் வழக்கறிஞர் நம்பிசெல்வன் வாதிட்டார். பின்னர் நீதிபதி, "மனுதாரருக்கு முன்ஜாமீன் வழங்க முடியாது. மனு தள்ளுபடி செய்யப்படுகிறது. மனுதாரரை போலீஸார் கைது செய்ய வேண்டும். இந்த மோசடியில் கல்வித்துறை அதிகாரிகளுக்கு தொடர்பு இருக்க வாய்ப்புள்ளது. இதனால் பள்ளிக்கல்வித்துறை இயக்குனர் அனைத்து தரப்பினருக்கும் உரியவாய்ப்பு வழங்கி மோசடி குறித்து விசாரித்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்'' என உத்தரவிட்டார்.

# டிஎன்பிஎஸ்சி புள்ளியியல் பணி தேர்வு: உடனடியாக கலந்தாய்வு நடத்த தமிழக அரசுக்கு ராமதாஸ் வலியுறுத்தல்



சென்னை , ஜன, 23–

தமிழக அரசின் பொது சுகாதாரத்துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளில் காலியாகஉள்ளபுள்ளியியல் சார்ந்த பணியிடங்களை நிரப்புவதற்காக தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்பட்ட ஒருங்கிணைந்த சார்நிலை புள்ளியியல் தேர்வு முடிவுகள்வெளியிடப்பட்டு 5 மாதங்களாகியும், அதில் வெற்றி பெற்றவர்களுக்கு இன்னும் கலந்தாய்வு நடத்தி பணி ஆணைகள் வழங்கப்படவில்லை. உடனடியாக கலந்தாய்வு நடத்த வேண்டும் என பாமக நிறுவனர் ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

பாமக நிறுவனர் ராமதாஸ் இது குறித்து வெளியிட்டிருக்கும் அறிக்கையில், 'தமிழக அரசின் பொது சுகாதாரத்துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளில் காலியாகஉள்ளபுள்ளியியல் சார்ந்த பணியிடங்களை நிரப்புவதற்காக தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்பட்ட ஒருங்கிணைந்த சார்நிலை புள்ளியியல் தேர்வு முடிவுகள்வெளியிடப்பட்டு 5 மாதங்களாகியும், அதில் வெற்றி பெற்றவர்களுக்கு இன்னும் கலந்தாய்வு நடத்தி பணி ஆணைகள் வழங்கப்படவில்லை. படித்த இளைஞர்களுக்கு அரசு வேலை வழங்குவதில் தேர்வாணையம் காட்டும் அலட்சியம் கண்டிக்கத்தக்கது.

தமிழகஅரசின்பல்வேறு நிலைகளில் காலியாக உள்ள ஒருங்கிணைந்த சார்நிலை புள்ளியியல் பணிகளைநிரப்புவதற்கான விண்ணப்பங்கள் கடந்த 2022 ஆம் ஆண்டு செப்டம்பர் 15–ஆம் நாள் முதல் அக்டோபர் 14–ஆம் நாள் வரை பெறப்பட்ட நிலையில், அடுத்த இரண்டரை மாதங்களில் தமிழ்நாடு அரசுபணியாளர் தேர்வாணையத்தால் அறிவிக்கப்பட்டவாறு தேர்வுகள் நடத்தப்பட்டன. தேர்வாணையம் வெளியிட்ட கால அட்டவணைப்படி ஜனவரி மாதம் நடத்தப்பட்ட போட்டித்தேர்வுகளுக்கான முடிவுகள் கடந்த ஆகஸ்ட் மாதம்வெளியிடப்பட்டன.

அதன்பின் ஒரு மாதத்தில் சான்றிதழ் சரிபார்ப்பும், கலந்தாய்வும் நடத்தி முடிக்கப்பட்டு, பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால், 5 மாதங்கள் ஆகியும் அதற்கான ஏற்பாடுகளைக் கூட தமிழ்நாடு அரசுப் பணியாளர்தேர்வாணையம் செய்யவில்லை.

புள்ளியியல் பணிகளுக்கான போட்டித் தேர்வுகள் கடந்த ஆண்டு ஜனவரிமாதம்நடத்தப்பட்ட நிலையில், மார்ச் மாதத்தில் முடிவுகள்வெளியிடப்பட்டு, ஏப்ரல் மாதத்தில் கலந்தாய்வு நடத்தப்பட்டு பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டிருக்க வேண்டும்.

ஆனால்,இருமாதங்களில் வெளியிடப்பட்டிருக்க வேண்டியபோட்டித்தேர்வு முடிவுகள் 7 மாதங்கள் ஆகியும் கடந்த ஆகஸ்ட் மாத மத்தியில் வரை வெளியிடப்படவில்லை. தேர்வு முடிவுகளை உடனடியாக வெளியிட வேண்டும் என்று கடந்த ஆகஸ்ட் 24 ஆம் தேதி நான் அறிக்கை வெளியிட்டிருந்தேன். அதன்பிறகு தான் ஆகஸ்ட் இறுதியில் முடிவுகள் வெளியிடப்பட்டன.

அதேபோல், ஆகஸ்ட் மாதத்தில் வெளியான போட்டித்தேர்வுமுடிவுகளில் வெற்றி பெற்றவர்களுக்கு கடந்த செப்டம்பர் மாதமே கலந்தாய்வு நடத்தப்பட்டிருக்க வேண்டும். ஆனால், இதுவரை நடத்தப்படாத நிலையில், கலந்தாய்வு எப்போது நடத்தப்படும்? என்று தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தை தொடர்பு கொண்டு விசாரித்த தேர்வர்களுக்கு ஆணையத்தின் சார்பில் பொறுப்பான பதில் அளிக்கப்பட வில்லை. அதனால் கலந்தாய்வு எப்போது நடக்கும்? தங்களுக்கு எப்போது வேலைகிடைக்கும்?என்பது தெரியாமல் ஆயிரத்திற்கும் மேற்பட்ட போட்டித் தேர்வர்கள் தவித்துக் கொண்டிருக்கின்றனர்.

சார்நிலை புள்ளியியல் பணிகளுக்கான குறைந்தபட்ச கல்வித் தகுதி பட்டப்படிப்பு ஆகும். கடந்த ஆண்டே பட்டப்படிப்பை முடித்த பல்லாயிரக்கணக்கான பட்டதாரிகள், முதுநிலை பட்டப்படிப்பில் கூட சேராமல், மிகுந்த நம்பிக்கையுடனும், ஆர்வத்துடனும் இந்த போட்டித் தேர்வில் பங்கேற்றனர். கடந்த ஆண்டுஏப்ரல்மாதத்துடன் தேர்வு நடைமுறைகள் முடிவடைந்து விடும் என்பதால், முடிவுகளைத் தெரிந்து கொண்டு பட்ட மேற்படிப்பில்சேர அவர்கள் திட்டமிட்டிருந்தனர். ஆனால், இப்போது வரை கலந்தாய்வு நடத்தப்படவில்லை; இனி எப்போது கலந்தாய்வு நடத்தப்படும் என்பது தெரியாது என்பதால், வரும்கல்வியாண்டிலாவது அவர்கள் பட்ட மேற்படிப்பில்சேரமுடியுமா? என்பது தெரியவில்லை.

முதல் நிலைத் தேர்வு, முதன்மைத்தேர்வு என இரு அடுக்குகளைக் கொண்ட தொகுதி 1, தொகுதி 2 பணிகளுக்கான போட்டித் தேர்வு நடைமுறைகள் அவை அறிவிக்கப்பட்ட நாளிலிருந்து 10 மாதங்களில் முடிக்கப்படவேண்டும்;ஒரே தேர்வைகொண்டதொகுதி 4 உள்ளிட்ட பிற போட்டித் தேர்வு நடைமுறைகள் அதிகபட்சமாக 6 மாதங்களில் முடிக்கப்பட வேண்டும்என்றுபாட்டாளி மக்கள் கட்சி தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.

ஆனால்,ஒருங்கிணைந்த சார்நிலை புள்ளியியல் பணிகளுக்கான போட்டித் தேர்வுகள் அறிவிக்கப்பட்டு, 16 மாதங்களாகியும் தேர்வு நடைமுறைகள் இன்னும் நிறைவடைய வில்லை. இதற்குக்காரணம்தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் அலட்சியம் மட்டுமே.

எப்பாடு பட்டாவது அரசுப் பணியில் சேர்ந்து விட வேண்டும் என்று ஒருங்கிணைந்த சார்நிலை புள்ளியியல் பணிகளுக்கான போட்டித்தேர்வுகளை எழுதியவர்கள் இப்போது வரை கலந்தாய்வு நடத்தப் படாததால் கடுமையான மன உளைச்சலுக்கு ஆளாகியுள்ளனர். அவர்களின் மன உளைச்சலை முடிவுக்கு கொண்டு வரும் வகையில், ஒருங்கிணைந்த சார்நிலை புள்ளியியல் தேர்வுக்கான கலந்தாய்வு அட்டவணையைதமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் உடனடியாக வெளியிட வேண்டும். அடுத்த ஒரு மாதத்திற்குள் கலந்தாய்வை நடத்தி, வெற்றி பெற்ற அனைவருக்கும் சம்பந்தப்பட்ட அரசுத் துறைகள் மூலமாக பணி நியமன ஆணைகளை வழங்க தேர்வாணையம் நடவடிக்கை எடுக்க வேண்டும்" எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இன்று

**23-1-2024**



பிரதோஷம்



நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் பிறந்த நாள்

முழுமுதற் ப்ரசுநாதர் : உணவு தோஷம் தனிக்கும், ஆரோக்கியம் அருளும் திருத்தலம்.

சக வருடம் 1945 மாகம் 03

| சோபகிருது தை 9 | JAN - TUE செவ்வாய் | ரஜப் 11 வளர்பிறை 023 / 343 | இராசிபலன் |
|---|---|---|---|

வளர். திரயோதசி 38.22 (மா. 09.56) திருவாதிரை 60.00 (முழுவதும்) தியாஜ் 22.01 மரண. **பிரதோஷம்.** கோவை ஸ்ரீபாலதண்டாயுதபாணி மயில் வாகனத்தில் பவனி. திருநெல்வேலி ஸ்ரீநெல்லையப்பர் பவனி. மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர் காலை தங்கப் பல்லக்கு, விருஷப சேவை.

| | நல்லநேரம் | கௌரி.நே. | இராகு | குளிகை | எமகண்டம் |
|---|---|---|---|---|---|
| காலை | 7.30-8.30 | 10.30-11.30 | 03.00 | 12.00 | 09.00 |
| மாலை | 4.30-5.30 | 7.30-8.30 | 04.30 | 01.30 | 10.30 |

சூலம் : வடக்கு; பரிகாரம் : பால்

மகர லக்னம் இருப்பு நா. 3 வி. 48

சந்திராஷ்டமம் விசாகம்

கரணம் : 7.30-9; சூரிய உதயம் : 6.35

தனிமரம் தோப்பு ஆகாது

| இராசிபலன் | |
|---|---|
| மேஷம் | போட்டி |
| ரிஷபம் | பொறுமை |
| மிதுனம் | நலம் |
| கடகம் | லாபம் |
| சிம்மம் | இரக்கம் |
| கன்னி | சிந்தனை |
| துலாம் | மறதி |
| விருச்சி | சோதனை |
| தனுசு | நட்பு |
| மகரம் | வெற்றி |
| கும்பம் | அசதி |
| மீனம் | புகழ் |

## சிந்திப்போம்.... செயல்படுவோம்









## உரிமைகளை தொலைத்தவர்களின் உரிமை மீட்பு மாநாடு தெலங்கானா ஆளுநர் தமிழிசை விமர்சனம்

சென்னை, ஜன.23–

உரிமைகளை தொலைத்தவர்களே உரிமை மீட்பு மாநாடு நடத்துகிறார்களாம் என திமுக இளைஞரணி மாநாடு குறித்து தெலங்கானா ஆளுநர் தமிழிசை சவுந்தரராஜன் விமர்சனம் செய்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தனது எக்ஸ் வலைதள பக்கத்தில் கூறியிருப்பதாவது: இளைஞரணி மாநாடாம், பிரம்மாண்ட முன்னேற்பாடாம், முந்தைய நாளே முக்கியமானவரின் மேற்பார்வையாம், தம்பிகளை காண தனி விமானம் மூலம் சென்ற முக்கியமானவருக்கு முந்தைய நாளே மழைக்கான முன்அறிவிப்பு வந்தும்



மக்களைக் காக்க முன்னேற்பாடு செய்ய செல்வதற்குதனி விமானம் கிடைக்கவில்லையா என்று எங்கோ கேட்கிறது ஒரு குரல்.

இன்றுஉதயமானவரை முன்னிலைப்படுத்த முந்திச் செல்லும் முக்கியமானவர், இதயத்தோடு தத்தளித்தவர்களை காக்க முந்திச்செல்லவில்லையே ஏன் என்று கேட்கிறது அதே குரல். இது ஆள்பவர்களுக்கு தகுதியா என்று கேட்டால் ஆளுநர்களுக்கு தகுதி இல்லை என்பார்கள்.

ஆனால் ஜனநாயகத்தில் ஆளாளுக்கும் கேள்வி கேட்கும் தகுதி இருக்கிறது என்று உரக்கச்சொல்கிறது அதே குரல். உரிமை மீட்பு மாநாடாம், காவிரி உரிமையை தொலைத்தது யார், கச்சத்தீவை தாரைவார்த்தது யார், ஜல்லிக்கட்டு உரிமையை இழந்தது யார், கல்வி உரிமையைபறிகொடுத்தது யார், நீட் தேர்வு வர ஆரம்பித்தது யார் காலத்தில், உரிமைகளைத் தொலைத்தவர்களே இன்றுஉரிமைமீட்புமாநாடு நடத்துகிறார்களாம்.

வாரிசுகளுக்கே அரியணையா, இவர்களிடமிருந்து நம் உரிமையைமீட்டெடுப்பது யார் (தி)க்கு (மு)க்காடும் (க)ண்மணிகள். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.



▶ தென்காசி மாவட்டம் சிவகிரியில் மாவட்ட மருத்துவ அணி பொறுப்பாளர் மருத்துவர் மணிகண்டன் விஸ்வநாத பேரி ஊராட்சி மன்றத் தலைவி ஜோதி மணிகண்டன் மற்றும் வேல் கேர் மருத்துவமனை சார்பாக 15 லட்சம் செலவில் சொந்த நிதியிலிருந்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு இலவச ஆம்புலன்ஸ் சேவை தென்காசி வடக்கு மாவட்ட திமுக செயலாளர் ராஜா எம்எல்ஏ தலைமையில் தொடங்கி வைத்தார். தனுஷ் எம் குமார்எம்.பி, சதன் திருமலை குமார் வாசு சட்டமன்ற உறுப்பினர், யூஎஸ்டி சீனிவாசன் தலைமை செயற்குழு உறுப்பினர், வாசுதேவநல்லூர் ஒன்றிய குழுத் தலைவர் முத்தையா பாண்டியன், மாவட்ட துணைச் செயலாளர் மனோகரன், மாநில மருத்துவர் அணி துணைச் செயலாளர் செ.சு. செண்பக விநாயகம், கோமதி சங்கரி சுந்தரவடிவேலு பேரூராட்சி மன்றத் தலைவர், ஆகியோர் கலந்து கொண்டு தென்காசி அரசு மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்காக செல்லும் நோயாளிகளுக்கு புதிய ஆம்புலன்ஸ் சேவை மற்றும் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு தொடங்கி வைக்கப்பட்டது.

## புதுக்கோட்டை சுதர்சன் பொறியியல் கல்லூரியில் வளாக நேர்காணல்



புதுக்கோட்டை, ஜன.23–

புதுக்கோட்டை சுதர்சன் பொறியியல் கல்லூரியில் மாபெரும் வளாக நேர்காணல் நேற்று நடைபெற்றது, இதில் கோவை சக்தி கியர்ஸ் நிறுவனத்தின் மனித வள மேம்பாட்டு அதிகாரிகள் நேர்காணலை இரண்டு சுற்றுகளாகநடத்திஇறுதி ஆண்டு இயந்திரவியல் பொறியியல் துறையை சார்ந்த 12 மாணவர்களைத் தேர்வு செய்தனர், இதில் மாணவர்களின் திறனை அறிய அறிவு பரிசோதனை நடத்தப்பட்டது.

நேர்காணலை கல்லூரி முதல்வர் கு. ஸ்ரீநிவாஸன் துவக்கி வைத்தார், நிகழ்ச்சியை துவக்கி வைத்து அவர் கூறுகையில் மாணவர்களின் திறனறிவும் இயந்திரவியல் திறன் மேம்பாடும் வேலை வாய்ப்பிற்கு எவ்வளவு முக்கியம் என்பதை அறிவுறுத்தினார், இந்நிகழ்ச்சியை கல்லூரியின் வேலைவாய்ப்பு ஒருங்கிணைப்பாளர் மற்றும் செயற்கை நுண்ணறிவு மற்றும் தரவு அறிவியல் துறை தலைவர் சூ. ஜான்ஜோசப் ஏற்பாடு செய்திருந்தார், தேர்வு செய்யப்பட்ட மாணாக்கரை சுதர்சன் கல்வி நிறுவனத்தின் தாளாளர் விஜய்குமார், செயலாளர் அஜய்குமார் மற்றும் ஆம்பிவெஞ்சர்ஸ் தலைமை செயலதிகாரி ப்ரதீப்குமார் பாராட்டினர், இறுதியாக மாணவர்களுக்கு பணி நியமன ஆணைகளை கல்லூரி முதல்வர் கு. ஸ்ரீநிவாஸன் வழங்கினார்.

மேலநீலிதநல்லூர் பிஎம்டி கல்லூரியில் புதுமைப் பெண் திட்ட பயனாளிகளுக்கு

## முதலமைச்சரின் வாழ்த்து மடல் வழங்கும் நிகழ்ச்சி வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா எம்எல்ஏ வழங்கினார்



சங்கரன்கோவில், ஜன.23–

புதுமைப் பெண் திட்ட பயனாளிகளுக்கு தமிழக முதலமைச்சர் ஸ்டாலினின் வாழ்த்து மடல் வழங்கும் நிகழ்ச்சி பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நடைபெற்றது, கல்லூரி முதல்வர் ஹரிகெங்காராம் வரவேற்றார், மாவட்ட சமூக நல அலுவலர் மதிவதனா திட்டத்தின் விளக்க உரை ஆற்றினார்.

புதுமைப் பெண் திட்டமானது அரசுப் பள்ளிகளில் இருந்து உயர்கல்வி நிறுவனங்களுக்குச்செல்லும் பெண் குழந்தைகளின் சேர்க்கை விகிதத்தை அதிகரிக்க தமிழக அரசு மூவலூர் ராமாமிர்தம் அம்மையார் உயர்கல்வி உறுதித் திட்டத்தைத் தொடங்கியுள்ளது. இத்திட்டத்தின் மூலம், நிதி உதவியாக மாதம் ரூ. 1000 யுஜி பட்டப்படிப்பு/ டிப்ளமோ/ஐடிஐ/ வேறு ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட படிப்பை முடிக்கும் வரை பெண்களுக்கு வழங்கப்படும். இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் ஊக்கத்தொகை மாணவர்களின் வங்கிக் கணக்கில் நேரடியாக செலுத்தப்படும்.

புதுமை பெண் திட்டத்தின் கீழ் உதவி பெறும் மாணவிகளை ஊக்குவிக்கும் பொருட்டு முதலமைச்சர் ஸ்டாலினின் கையொப்பமிட்ட வாழ்த்து மடலை வடக்கு மாவட்டச் செயலாளர் ராஜா எம்எல்ஏ 83 கல்லூரி மாணவிகளுக்கு வழங்கி, திட்டத்தின் நோக்கங்கள் மற்றும் பயன்கள் குறித்து பேசினார், இதில் மேலநீலிதநல்லூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் பெரியதுரை, சங்கரன்கோவில் நகரச் செயலாளர் பிரகாஷ், மகளிர் அதிகார மைய பணியாளர்கள், கல்லூரி பேராசிரியர்கள், மாணவிகள் ஆகியொர் கலந்து கொண்டனர், முடிவில் வணிகவியல் துறை பேராசிரியர் ஷேக்அப்துல்லா நன்றி கூறினார்.

## தமிழ்நாட்டில் 6.18 கோடி இறுதி வாக்காளர்கள் பட்டியல் வெளியீடு

சென்னை, ஜன.23–

தமிழ்நாட்டில் இறுதி வாக்காளர் பட்டியலை தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரதா சாகு வெளியிட்டார்.



நாடாளுமன்ற மக்களவையின் பதவிக்காலம் ஜூன் மாதம் 16–ந்தேதி முடிவடைகிறது. 18–வது நாடாளுமன்ற மக்களவை தேர்தல் வருகிற ஏப்ரல் அல்லது மே மாதத்தில் நடைபெற உள்ளது. இதையொட்டி தேசிய, மாநில கட்சிகள் கூட்டணி குறித்த பேச்சுவார்த்தையை தற்போதே தொடங்கி உள்ளன. மேலும் நாடாளுமன்ற தேர்தலுக்கான ஆயத்த பணிகளில் இந்திய தேர்தல் ஆணையம் தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

இந்நிலையில், தமிழ்நாட்டில் ஒருங்கிணைந்த இறுதி வாக்காளர் பட்டியலை சென்னை தலைமை செயலகத்தில் இருந்து தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரதாசாகு நேற்று வெளியிட்டார். அதன்படி, தமிழ்நாட்டில் மொத்தம் 6.18 கோடி வாக்காளர்கள் உள்ளனர். 3.14 கோடி பெண்கள், 3.03 கோடி ஆண்கள் மற்றும் 8,294 மூன்றாம் பாலின வாக்காளர்கள் உள்ளனர். தமிழ்நாட்டில் அதிக வாக்காளர்களை கொண்ட தொகுதியாக சோழிங்கநல்லூர் முதல் இடத்திலும், கோவையில் உள்ள கவுண்டம்பாளையம் தொகுதி 2-வதுஇடத்திலும் உள்ளன. தமிழ்நாடு தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரதா சாகு செய்தியாளர்கள் சந்திப்பில், கடந்த அக்டோபர் மாதம் வெளியிடப்பட்ட வரைவு வாக்காளர் பட்டியலை விட தற்போது கூடுதலாக 7 லட்சம் வாக்காளர்கள் எண்ணிக்கை அதிகரித்துள்ளது என தெரிவித்தார்.

## புதுச்சேரியில் புதிதாக கட்டப்பட்ட 3 மாடி வீடு திடீரென இடிந்து விழுந்து தரைமட்டம்

புதுச்சேரி, ஜன.23–

வாய்க்காலில் தோண்டப்பட்ட பள்ளத்தின் காரணமாக, புதுச்சேரியில் புதிதாக கட்டிமுடிக்கப்பட்டு புதுமனைப் புகுவிழா நடைபெற இருந்த 3 மாடி வீடு சாய்ந்து முழுவதுமாக இடிந்து விழுந்தது. நல்வாய்ப்பாக யாருக்கும் பாதிப்பு இல்லை.



புதுச்சேரியில்நகரத்தின் மேட்டுப்பகுதியில் இருந்து வெளியேறும் சாக்கடை நீர் அனைத்தும் வெளியேறும் வழியாக உப்பனாறு வாய்க்கால் உள்ளது. பல ஆண்டுகளாக இதை சீரமைக்காமல் உள்ளனர். இதற்கு மேலே காமராஜர் சாலையில் இருந்து மறைமலை அடிகள் சாலை வரை மேம்பாலம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஒப்பந்ததாரர்களுக்கு உரிய பணம் தராத காரணத்தால் இந்தப் பணி பல ஆண்டுகளாக நிறுத்தப்பட்டுள்ளது.

மறைமலை அடிகள் சாலையைத் தாண்டி ஆட்டுப்பட்டி வழியாக வாய்க்காலை சீரமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. இன்று மதியம் பொக்லைன் இயந்திரம் மூலம் வாய்க்காலில் பக்கவாட்டு பகுதி சீரமைக்கப்பட்டு சுவர் எழுப்புதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதற்காக வாய்க்காலின் மண் அள்ளும் பணியில் ஜேசிபி இயந்திரம் ஈடுபட்டது. இதனால் வாய்க்கால் ஓரம் கட்டப்பட்டுள்ள வீடுகளுக்கு அதிர்வு ஏற்பட்டது. இதற்கு அப்பகுதி மக்கள் எதிர்ப்பை தெரிவித்தனர்.

இத்தகவல் அறிந்து தொகுதியின் முன்னாள் எம்எல்ஏவும் அதிமுக மாநில செயலாளர் அன்பழகன் மற்றும் அப்பகுதி மக்கள் கூடி வாய்க்கால் அமைக்கும் பணிக்கு எதிர்ப்பு தெரிவித்தனர். தகவல் அறிந்து ஒதியன்சாலை போலீஸாரும் அங்கு வந்தனர். வாய்க்காலுக்கு அதிகப்படியான மணல் தோண்டுவதால் குடியிருப்புகள் பாதிக்கப்படுவதாகபொது மக்கள் எதிர்ப்பு தெரிவித்து கொண்டிருந்த நிலையில், திடீரென அப்பகுதியில் கட்டப்பட்டிருந்த மூன்று மாடி கட்டிடம் ஒன்று சரிந்து விழுந்தது. இதனை சற்றும் எதிர்பாராத அதன் அருகே நின்றிருந்த பொதுமக்கள்,போலீஸார் மற்றும் முன்னாள் எம்எல்ஏ அன்பழகன் ஆகியோர் அங்கிருந்து ஓடினார்கள்.

இடிந்த கட்டடம் பற்றி விசாரித்தபோது, சேகர் – சித்ரா தம்பதியினர் கட்டி உள்ள மூன்று மாடி கட்டிடம் இது. இன்னும் சில தினங்களில் புதுமனை புகுவிழா நடைபெற இருந்தது. இந்நிலையில் இந்த புது வீடு இன்று விழுந்துள்ளது. வீடு கட்டுமான பணி நிறைவு பெற்றும் கிரகபிரவேசம் நடக்காததால் வீட்டின் உள்ளே யாரும் இல்லை. வெளியே நின்று இருந்தவர்களும் ஓடியதால் நல்வாய்ப்பாக யாருக்கும் எந்த ஆபத்தும் ஏற்படவில்லை. அதிகப்படியான மணல் அள்ளியதன் காரணமாக வீடு இடிந்து விழுந்ததாக குற்றஞ்சாட்டி அப்பகுதி மக்கள் சாலை மறியலில் ஈடுபட்டுள்ளனர்.

## கோவை தர்மலிங்கேஸ்வரர் கோயில் அறங்காவலர் இடைநீக்க விவகாரம்: தமிழக அரசுக்கு ஐகோர்ட் தடை

சென்னை, ஜன.23–

கோவை மாவட்டம் மதுக்கரை தர்மலிங்கேஸ்வரர் சுவாமி திருக்கோயில் வாழ்நாள் அறங்காவலருக்கு எதிரான நடவடிக்கையில் நீதிமன்ற அனுமதியின்றி எந்த ஒரு பாதமான இறுதி முடிவும் எடுக்க தமிழக இந்து சமய அறநிலையத் துறைக்கு சென்னை உயர் நீதிமன்றம் தடை விதித்து உத்தரவிட்டுள்ளது.



கோவை மாவட்டம் மதுக்கரை தர்மலிங்கேஸ்வரர் சுவாமி திருக்கோயிலில் வாழ்நாள் அறங்காவலராக பணியாற்றிய கிருஷ்ணசாமி என்பவரை நிர்வாக குறைபாடு உள்ளிட்ட குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் இடை நீக்கம் செய்து கோவை மாவட்ட இந்துசமய அறநிலையத்துறை இணை ஆணையர் ஜனவரி 3-ம் தேதி உத்தரவு பிறப்பித்தார். இந்த உத்தரவை ரத்து செய்ய கோரியும், உத்தரவுக்கு தடை விதிக்க வேண்டும் கோரியும் கிருஷ்ணசாமி சென்னை உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளார்.

அந்த மனுவில், கோயிலை நிறுவிய பரம்பரை அறங்காவலரான மறைந்த மந்தன நரசிம்ம ராஜு, கடந்த 1985-ம் ஆண்டு தன்னுடன் சேர்த்து ஐந்து வாழ்நாள் அறங்காவலர்களை நியமித்தார். கடந்த 40 ஆண்டுகளில் அறங்காவலர்களின் சொந்த நிதியில், கிணறு தோண்டி, குழாய் இணைப்புகள் கொடுத்து, மின் விளக்குகள் பொருத்தி, கோயிலை ஒட்டியுள்ள மலைக்கு செல்ல நடைபாதை அமைத்து, அன்னதான மண்டபம் அமைத்து, கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தி கோயிலின் வளர்ச்சிக்காக கடுமையாக உழைத்தேன்.

கடந்த 1999 - 2022ம் ஆண்டுகளுக்கு இடையில் மற்ற நான்கு அறங்காவலர்கள் மரணமடைந்து விட்டனர். சமூகத்தில் நன்மதிப்பை பெற்ற, நான்கு பக்தர்களை அறங்காவலர்களாக நியமிக்கும்படி, கோவை மாவட்ட இந்து சமய அறநிலைய துறை இணை ஆணையருக்கு கடந்த 2023-ம் ஆண்டு மே மாதம் கடிதம் அனுப்பினேன். இதற்கிடையில், இணை ஆணையரின் பரிந்துரையை ஏற்று, கோயிலுக்கு செயல் அலுவலரை நியமித்து அறநிலையத் துறை ஆணையர், 2023, அக்டோபரில் உத்தரவு பிறப்பித்தார். அதற்கு எந்த ஆட்சேபமும் தெரிவிக்கவில்லை.

இருப்பினும், நான்கு வாழ்நாள் அறங்காவலர்களை நியமிக்கக் கோரிய தனது பரிந்துரை மீது இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. எனவே, சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தேன். அப்போது, இந்த விவகாரத்தில் தாமாக முன்வந்து நடவடிக்கை துவங்கியுள்ளதாக அறநிலையத் துறை அதிகாரிகள் தெரிவித்ததை ஏற்று வழக்கை உயர் நீதிமன்றம் முடித்துவைத்தது. மேலும், தனக்கு வயதாகி விட்டதாலும், வாழ்நாள் அறங்காவலர்களை நியமிக்கும் வரை, கோயிலுக்கு மண்டபம் கட்டிக்கொடுத்தது போன்ற காரியங்களைச் செய்த கண்ணன் என்பவரை தற்காலிக அறங்காவலராக செயல்படும்படி கூறினேன். அதை ஏற்று அவரும் தற்காலிக அறங்காவலராக செயல்பட்டு வந்ததார்.

கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் சித்ரா பவுர்ணமி விழா குறித்து விவாதிக்க நடந்த கூட்டத்தில் மற்ற உறுப்பினர்கள், கோயில் வரவு செலவு விவரங்களைக் கேட்ட போது, கண்ணன் அவர்களை துப்பாக்கி காட்டி மிரட்டியதால், அவரை பதவியில் இருந்து நீக்கினேன். இதற்கு பழிவாங்கும் வகையில், எந்த ஆதாரங்களும் இல்லாமல் கோயில் அறங்காவலர்களுக்கு எதிராக கண்ணன், அவதூறு கருத்துக்களை தெரிவித்து வந்ததாகவும் கூறியுள்ளார்.

மேலும், தனக்கும், பிற அறங்காவலர்களுக்கும் எதிராக அறநிலையத் துறையில் புகார் அளித்த கண்ணன், உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து சாதகமான உத்தரவு பெற்றார். அந்த உத்தரவின் அடிப்படையில் தங்களுக்கு எதிராக பொய் வழக்கு பதிவு செய்யப்பட்டது. கோயிலுக்கு நன்கொடை என்ற பெயரில் சட்டவிரோதமாக பணம் வசூலித்தும், கோயில் கணக்கு வழக்குகளை முறையாக கையாளவில்லை என்றும் கண்ணனுக்கு எதிராக அளித்த புகார் மீது இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இதனிடையே, கோயிலை முறையாக நிர்வகிக்கவில்லை என கண்ணன் அளித்த புகாரின் அடிப்படையில் அறநிலைய துறை அதிகாரிகள் விசாரணைக்கு அழைத்தனர். விசாரணைக்கு ஆஜராகி இந்த பொய் குற்றச்சாட்டுக்கள் குறித்து விளக்கமளித்தேன். ஆனாலும், தன்னை இடை நீக்கம் செய்து உத்தரவிட்டுள்ளனர். ஆதாரங்களை சமர்ப்பிக்க அவகாசம் வழங்காமல் பிறப்பிக்கப்பட்ட இடைநீக்க உத்தரவுக்கு தடை விதிக்க வேண்டும். அந்த உத்தரவை ரத்து செய்ய வேண்டும் என மனுவில் கோரியிருந்தார்.

இந்த வழக்கு நீதிபதி ஆதிகேசவலு முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது மனுதாரர் தரப்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் அப்துல்சலீம், "இந்து சமய அறநிலையத் துறை முழுமையாத ஆராயாமல், கவனத்தை செலுத்தாமல் இடை நீக்க உத்தரவை பிறப்பித்துள்ளது", என்று வாதிட்டார். அறநிலையத்துறை தரப்பில் ஆஜரான சிறப்பு வழக்கறிஞர் அருண் நடராஜன், "அறங்காவலர்கள் இறந்ததை தெரிவிக்கவில்லை. நன்கொடை சீட்டுகள் அடித்ததில் முறையான அனுமதி பெறவில்லை" என்று வாதிட்டார்.

இரு தரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதி, மனுதாரர் உரிய விளக்கத்தை இந்துசமய அறநிலைத்துறையிடம் தெரிவிக்க வேண்டும். அதை அறநிலையத் துறை ஆய்வு செய்ய வேண்டும் என உத்தரவிட்டார். மனுதாரருக்கு எதிராக எந்த ஒரு பாதகமான இறுதி நடவடிக்கைகளையும் நீதிமன்ற அனுமதியின்றி எடுக்க கூடாது என உத்தரவிட்டு விசாரணையை பிப்ரவரி 28-ம் தேதிக்கு ஒத்தி வைத்தார்.

# மக்களுடன் முதல்வர் திட்டத்தில் ஒரு மாதத்திற்குள் 3000க்கும் மேற்பட்டோர் பயன்பெற்றனர்



சென்னை , ஜன. 23–

சென்னை மாநகராட்சி திருவொற்றியூர் 13 வது வார்டு மாமன்ற உறுப்பினர் சுசீலா ராஜா தலைமையில் வட்ட செயலாளர் கேபிள் டிவி ராஜா முன்னிலையில் மேட்டு தெருவில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்ற மக்களுடன் முதல்வர் திட்டத்தின் குறை தீர்ப்பு முகாம் நடைபெற்றது.

பெருநகர சென்னை மாநகராட்சி ஒன்றாவது மண்டல குழு தலைவர் தி.மு தனியரசு கலந்து கொண்டு மக்களுடன் முதல்வர் திட்டத்தை தொடங்கிவைத்து மக்களின் கோரிக்கை மனுக்களை பெற்றார் ஒரே இடத்தில் அனைத்து துறைகளும் செயல்படுவதால் மக்கள் பிரச்சினை தீர்ப்பதற்காக ஏராளமான குவிந்தனர்.

தமிழ்நாடு மின்சார வாரியம், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை,குடிநீர் வழங்கல் துறை, ஊரக வளர்ச்சித்துறை, காவல் துறை, மாற்றுத்திறனாளிகள் துறை, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை, சமூக நல மற்றும் மகளிர் உரிமைத்துறை, ஆதி திராவிட நலத்துறை, பிற்படுத்தோர் நலத்துறை, வேலை வாய்ப்பு துறை கூட்டுறவுத்துறை உள்ளிட்ட 18 துறைகளை ஒன்றிணைத்து ஒரே இடத்தில் அனைத்து பிரச்சினைகளுக்கும் தீர்வு காண மக்களுடன் முதல்வர் திட்டம் நடைபெற்றது.


முதியோர் கைம்பெண் கணவனால் கைவிடப்பட்டோர் மாற்றுத்திறனாளி முதிர் கண்ணி மூன்றாம் பாலினத்தோர் 200க்கும் மேற்பட்டோர் பங்கேற்று மனுக்களை வழஙங்கியதால் உடனடியாக அவர்கள் கோரிக்கை நிறைவேற்றப்பட்டது. சொத்து வரி குடிநீர் வரி பெயர் மாற்றங்கள் புதிய குடிநீர் கழிவுநீர் இணைப்பு நில அபகரிப்பு மோசடி வரதட்சணை மற்றும் இதர புகார்கள் கட்டுமான வரைபட ஒப்புதல் நில உபயோக மாற்றுத்திற்கான ஒப்புதல் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விடத்தில் வீடு வேண்டி விண்ணப்பித்தல் பெண் குழந்தைகள் பாதுகாப்பு திட்டம் புதுமைப்பெண் கல்வி உதவி திட்டம் கல்வி உதவித்தொகை உள்ளிட்ட துறைகளில் அதிகமான மனுக்கள் பெறப்பட்டன. தீர்வு காண முடியாத சிக்கலான பிரச்சனைகளுக்கு முதலமைச்சர் தனி பிரிவிற்கு மனுக்கள் அனுப்பப்பட்டு ஒரு மாதத்திற்குள் தீர்வு காணப்படுகிறது.

ஒரே இடத்தில் அனைத்து துறைகளைச் சார்ந்த அதிகாரிகள் பங்கேற்று மக்கள் பிரச்சனைகளை தீர்த்து வருவதால் ஒரு மாதத்தில் 13 நாட்கள் நடைபெற்ற மக்களுடன் முதல்வர் திட்டத்தில் 3000க்கும் மேற்பட்டோர் பயன்பட்டு உள்ளனர்

# சென்னை காசிமேடு பகுதியில் இரவில் கத்தியை காட்டி மிரட்டி வழிப்பறியில் ஈடுபட்ட ரவுடி: தனிப்படை போலீசாரால் கைது








காசிமேடு, ஜன. 23–

சென்னை காசிமேடு இந்திரா நகர் பகுதியில் வசித்து வருபவர் பிரபல ரவுடியான சூர்யா (எ) வெள்ளை சூரியா(23) இவன் "மீது ஏற்கனவே இரண்டு கொலை மற்றும் கொள்ளை, வழிப்பறி, கஞ்சா, மெத்தபட்டமைன் உள்ளிட்ட வழக்குகள் நிலுவையில் உள்ளநிலையில் கடந்த சில நாட்களாக தனது நண்பர்களுடன் சேர்ந்து காசிமேடு மீன் சந்தை பகுதியில் மீன் வாங்க வரும் வியாபாரிகளிடம் இரவு நேரத்தில் கத்தியை காட்டி மிரட்டி பணம் செல்போன் நகைகளை போன்றவற்றை பறித்து கொண்டு பொதுமக்கள் வசிக்கும் வீடுகளில் பீர் பாட்டில்களை வீசி உடைத்து அச்சுறுத்தி பொதுமக்களைபீதிஅடைய செய்ததால் பொதுமக்கள் ஒன்றுசேர்ந்து வியாபாரிகள் மீனவ சங்கத்தினரிடம் முறையிடவே மீனவ சங்கத்தினர் அளித்தபுகாரின் பேரில் சூர்யாவை போலீசார் நோட்டமிட ஆரம்பித்து இரவு நேரங்களில் அவன் வழிப்பறிசெய்யும் இடத்தில் வியாபாரிகளோடு வியாபாரிகளாக சேரந்து சுற்றி வந்தனர்.

இந்நிலையில் சூர்யா நேற்றிரவு வழக்கம் போல் தனது வழிபறியை தொடர கையும் களவுமாக சூர்யா அவனது நண்பன் தேசப்பன், ஆகியோரை தனிப்படை போலீசார் கைதுசெய்தனர். வழக்குப்பதிவு செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர்.

சுமார் "21 செல்போன்கள் வரை வழிப்பறி செய்ததாக கூறப்படும் சூர்யாவிடம் இருந்து 7 செல்போன்கள் பறிமுதல் செய்யப்பட்டது குறிப்பிடதக்கது சூர்யாவின் தாய் சுபா மீது கஞ்சா மற்றும் போதை பொருட்கள் விற்பனை தொடர்பாக இரண்டு வழக்குகள் உள்ளதும் குறிப்பிடதக்கது

# ஆறுபாடி மாரியம்மன் ஆலய மஹா கும்பாபிஷேகம் 14 ஆண்டுகளுக்குப் பிறகு வெகு விமர்சையாக நடைபெற்றது





தரங்கம்பாடி, ஜன.23–

மயிலாடுதுறை அருகே ஆறுபாதி ஊராட்சியில் விளநகர் பகுதியில் ஸ்ரீ வரதராஜ பெருமாள் திருக்கோயிலை சேர்ந்த கீழ மாரியம்மன் ஆலயம் அமைந்துள்ளது. இவ்வாலயத்தில் 14 ஆண்டுகளுக்குப் பிறகு திருப்பணிகள் முடிக்கப்பட்டு மஹா கும்பாபிஷேகம் திங்கள் கிழமை வெகு விமர்சையாக நடைபெற்றது.

இதனை முன்னிட்டு அனுக்ஞை மற்றும் விக்னேஸ்வர பூஜை உடன் சிறப்பு ஹோமங்கள் கடந்த இருபதாம் தேதி தொடங்கியது. தொடர்ந்து யாகசாலை பூஜைகள் திங்கள் கிழமை நிறைவுற்று மஹா பூர்ணாகுதி நடைபெற்று. பின்னர் மேல வாத்தியங்கள் முழங்க யாகசாலையில் வைத்து பூஜிக்கப்பட்ட கடங்கள் ஊர்வலமாக ஆலயத்தை சுற்றி வந்து கோபுர கலசத்திற்கு வந்தடைந்தது. பின்பு கோபுர கலசங்களுக்கு புனித நீர் ஊற்றப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெற்று மகாதீப ஆராதனை நடைபெற்றது.

இதில் கோயில் அறங்காவல் துறை செயல் அலுவலர் முருகன் ஆய்வாளர் கண்ணதாசன் பணியாளர்கள் சதீஷ் ஜனார்த்தனன் உள்ளிட்ட திரளான பக்தர்கள் பங்கேற்று சுவாமி தரிசனம் செய்தனர்.



காரைக்கால் மாவட்டத்தில் வருகின்ற ஜனவரி 25-ஆம் தேதி நடைபெறும் தேசிய வாக்காளர் தினத்தை முன்னிட்டு பொதுமக்களுக்கும் இளம் வாக்காளர்களுக்கும் தேர்தல் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வண்ணம் பல்வேறு போட்டிகள் நடைபெற இருக்கின்ற நிலையில் நேற்று பெருந்தலைவர் காமராஜர் வளாகத்தில் தேர்தல் விழிப்புணர்வு சம்பந்தமான அனைவரும் வாக்களிக்க வேண்டும் என்பதை மையமாகக் கொண்டு காரைக்கால் மாணவர்கள் தயாரித்த குறும் படம் போட்டியானது நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியை துணை ஆட்சியர் ஜான்சன் தொடங்கி வைத்தார்கள். குறும்படப் போட்டியை பண்டித ஜவஹர்லால் நேரு வேளாண் கல்லூரி பேராசிரியர் முனைவர். ஷெர்லி, காமராஜர் பொறியியல் கல்லூரியின் பேராசிரியர் சங்கர்லால் தலைமையில் நடைபெற்றது. குறும்படப் போட்டியில் பங்குபெற்ற அனைத்து குறும்படங்களையும் இயக்குனர் பிரதீப் கௌதமன், நடுவர்களாக இருந்து சிறப்பான குறும்படங்களை தேர்வு செய்தனர். இந்த நிகழ்ச்சியில் காரைக்கால் மாவட்டத்தில் உள்ள அனைத்து கல்லூரி இ.எல். சி. ஒருங்கிணைப்பாளர்கள், மாவட்ட ஸ்வீப் ஒருங்கிணைப்பாளர், உறுப்பினர்கள் , கல்லூரியில் பேராசிரியர்கள் கலந்து கொண்டார்கள்.



செங்கல்பட்டு மாவட்ட சதுரங்க கழகம் நடத்திய மாவட்ட அளவிலான பெண்கள் மற்றும் ஆண்கள் சதுரங்கப் போட்டி ஜனவரி மாதம் 20 மற்றும் 21ஆம் தேதி செங்கல்பட்டு வித்யாசாகர் கல்லூரியில் நடைபெற்றது. இதில் சுமார் 100 போட்டியாளர்கள் கலந்து கொண்டனர். இதில் மகளிர் குழுவில் வெற்றி பெற்ற இருபது போட்டியாளர்களுக்கு பரிசளிக்கப்பட்டது. வெற்றி பெற்றவர்களுக்கு வித்யாசாகர் கல்லூரி முதல்வர் மாரிசாமி மற்றும் ரோட்டரி மாவட்டம் 3231 சட்ட ஆலோசகர் பாண்டியன் பரிசு வழங்கினார்கள். பொதுப் பிரிவிலும் 20 பரிசுகள் வழங்கப்பட்டது. இரு பிரிவிலும் முதல் நான்கு பரிசு பெற்ற போட்டியாளர்கள், மாநில சாம்பியன்ஷிப் போட்டிக்கு தகுதி பெற்றனர்.




இந்தியா தனது 75 - ஆவது குடியரசு தின விழாவை ஜனவரி 26 -இல் கொண்டாடப்படுகிறது. இதில் நாட்டு நலப்பணித்திட்ட அணிவகுப்பில் கலந்து கொள்வதற்கு நாட்டின் 28 மாநிலங்கள் மற்றும் 8 யூனியன் பிரதேசங்களில் இருந்து 2, 274 கேடட்கள், ஒரு மாத கால குடியரசு தின முகாம் 2024–இல் பங்கு பெறுகின்றனர். இந்த ஆண்டு அணிவகுப்பில் பெண்கள் அதிகமானோர் பங்கேற்கின்றனர். புதுச்சேரி மாநிலத்திலிருந்து 3 பெண் மாணவர்கள் கலந்து கொள்கின்றனர். இதில் காரைக்கால் அவ்வையார் அரசு கலைக் கல்லூரி பி ஏ இரண்டாம் ஆண்டு படிக்கும் எஸ். திவ்யபாரதி அரசு மகளிர் தொழில்நுட்பக் கல்லூரி, இரண்டாம் ஆண்டு படிக்கும் கே. அகல்யா ஆகியோ கலந்து கொள்கின்றனர். இது புதுச்சேரி மாநிலத்திற்கும், காரைக்கால் மாவட்டத்திற்கும் பெருமை சேர்ப்பதாகவும், சிறப்புடையதாகவும் உள்ளது.



புதுவண்ணாரப்பேட்டையில் பூண்டி தங்கம்மாள் தெருவில் தேவி கருமாரியம்மன் ஆலயத்தில் முன்பு முன்னாள் மாமன்ற உறுப்பினரும் பாஜக மீனவர் அணி செயலாளர் சசிகலா நாகலிங்கம் ஏற்பாட்டில் கலசங்கள் வைத்து யாகம் வளர்தது ராமர் திருவுருவப் படத்திற்கு சிறப்பு பூஜைகள் செய்து வழிபட்டார். இந்த சிறப்பு பூஜையில் பாஜக நிர்வாகிகள் கலந்து கொண்டு ஜெய் ஸ்ரீ ராம் ஸ்ரீ ராமஜெயம் என்ற கோஷத்துடன் வழிபட்டனர். நிகழ்ச்சியில் நிகழ்ச்சி ஏற்பாடு சசிகலா நாகலிங்கம் இதில் மாநில செயலாளர் டாக்டர் சதீஷ்குமார் , மாநில மீனவர் பிரிவு தலைவர் முனுசாமி , மாவட்ட தலைவர் கிருஷ்ணகுமார் , மாநில மீனவர் பிரிவு செயலாளர் சௌந்தர் , மாவட்ட பொருளாளர் சதாசிவம் , மண்டல தலைவர் எஸ்டி கிருபானந்தம், வட்டத் தலைவர் புகழேந்தி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



வேலூர் மாவட்டம் அரியூர் தங்க கோவிலில், அயோத்தி ராமர் ஆலய கும்பாபிஷேகத்தை முன்னிட்டு வண்ண விளக்குகளால் மிளிரும் 108 அடி உயர ராமர் உருவம் வைத்துள்ளனர்.



கடலூர் மாவட்டம் காட்டுமன்னார்கோயில் ஊராட்சி ஒன்றிய வளாகத்தில் மகளிர் திட்டத்தின் சார்பாக வட்டார அளவிலான பன்முக கலாச்சார போட்டிகள் நடைபெற்றது போட்டிக்கு வட்டார இயக்க மேலாளர் திருமால்வளவன் தலைமையில் நடைபெற்றது இந்நிகழ்வில் ஊராட்சி ஒன்றிய பொறியாளர் சந்தானகிருஷ்ணன் போட்டியில் வெற்றி பெற்றவர்களை தேர்வு செய்தார் நிகழ்ச்சியில் ஏராளமான மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் போட்டியில் பங்கு பெற்றனர் இதில் வட்டார ஒருங்கிணைப்பாளர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்

# சென்னை வில்லிவாக்கம் போக்குவரத்து காவல் நிலையம் சார்பில், போக்குவரத்து விதிகள் பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சி





சென்னை , ஜன. 23–

போக்குவரத்து விதிகள் மற்றும் விதிமுறைகளை கடைப்பிடிக்க வேண்டியதன் அவசியம் குறித்த விழிப்புணர்வை பொதுமக்களுக்கு ஏற்படுத்தும் நோக்கில், சென்னை பெருநகர போக்குவரத்து காவல், அண்ணா நகர் போக்குவரத்து உட்கோட்டம், வி1 (V1) வில்லிவாக்கம் சரகம், போக்குவரத்து காவல் நிலையம் சார்பில், ராஜமங்கலம் சாலை சந்திப்பில் போக்குவரத்து விதிகள் பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

சென்னை போக்குவரத்து கூடுதல் ஆணையர் ஆர்.சுதாகரன் ஆணைக்கிணங்க, இணை ஆணையர் அபிஷேக் தீக்ஷித் உத்தரவின் பேரில், துணை ஆணையர் பி.குமார் அறிவுறுத்தலின் படி, உதவி ஆணையர் சுந்தர்ராஜன் தலைமையில், அண்ணா நகர் உட்கோட்டம், வி-1 வில்லிவாக்கம் போக்குவரத்து காவல் ஆய்வாளர் எம். ஜெயக்குமார் நிகழ்ச்சி ஒருங்கிணைப்பில், உதவி ஆய்வாளர் ப.லோகநாதன் மற்றும் சென்னை, வில்லிவாக்கம் நேரு யுவகேந்திராவினர் இணைந்து ராஜமங்கலம் சாலை சந்திப்பில் போக்குவரத்து விதிமுறைகள் குறித்த விழிப்புணர்வை பொதுமக்களுக்கு ஏற்படுத்தினர் அப்போது உதவி ஆய்வாளர் ப.லோகநாதன் பொதுமக்களிடம்..

"தலைக்கவசம் அணியாமல் வாகனம் ஓட்டுதல், இருசக்கர வாகனத்தின் பின்னால் இருப்பவர் தலைக்கவசம் அணியாமல் இருத்தல், ஒரு இருசக்கர வாகனத்தில் இரண்டுக்கும் மேற்பட்டோர் பயணம் செய்தல், வாகன காப்பீடு இல்லாமல் வாகனம் ஓட்டுதல், ஓட்டுநர் உரிமம் இல்லாமல் வாகனம் ஓட்டுதல், ஆம்புலன்ஸ் மற்றும் அவசர சேவை வாகனங்களுக்கு வழிவிடாமல் இருத்தல், சீட் பெல்ட் அணியாமல் கார் ஓட்டுவது, செல் போனில் பேசிக் கொண்டே வாகனங்களை ஓட்டுதல், மது அருந்திவிட்டு வாகனம் ஓட்டுதல், போக்குவரத்து சிக்னல்களை மதிக்காமல் வாகனங்களில் சாலையை கடந்து செல்லுதல், அதிவேகமாக வாகனம் ஓட்டுதல், சாலைகளில் வீலிங் செய்தல் மற்றும் பந்தயங்களில் ஈடுபடுவது, அதனால் உண்டாகும் பிரச்சினைகள், அதற்காக விதிக்கப்படும் அபராதம் குறித்து பொதுமக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தினார்.

# நெல்வாய் கிராமத்தில் ஊராட்சி ஒன்றிய நடுநிலை பள்ளியில் படிக்கும் மாணவர்களுக்கு கல்வி உபகரணங்கள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது




ஊத்துக்கோட்டை, ஜன23–

திருவள்ளூர் மாவட்டம், பூண்டி ஒன்றியம், நெல்வாய் கிராமத்தில் ஊராட்சி ஒன்றிய நடுநிலை பள்ளியில் படிக்கும் 45 மாணவ-மாணவியர்களுக்கு கல்வி உபகரணங்கள் வழங்கும் நிகழ்ச்சி பள்ளி வளாகத்தில் நடைபெற்றது.

வி.வி.வி.எஜுகேஷன் சொசைட்டி மற்றும் முத்தமிழ் கிராம வளர்ச்சி நிறுவனம் சார்பில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் ஏழை-எளிய மாணவர்களுக்கு தலா 2 செட் சீருடைகள், புத்தகப்பை, நோட்டுப் புத்தகங்கள் அடங்கிய கல்வி உபகரணங்கள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு, நெல்வாய் ஊராட்சி மன்ற தலைவர் பரமேஸ்வரி பொன்னுசாமி தலைமை தாங்கினார். ஊராட்சி மன்றத் துணைத் தலைவர் பாஸ்கர் முன்னிலை வகித்தார். இதில், ஒன்றிய செயலாளர் ஜான் பொன்னுசாமி, நெல்வாய் தலைமை ஆசிரியர் கே.மணி, ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியர் கஜேந்திரன், வி.பிரபு, எஸ். எம்.சி.மீனாட்சி, ஊராட்சி செயலர் கோவிந்தராஜ், திட்ட மேளாளர் டி.இளங்கோ ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினர்.

இதில், சிறப்பு விருந்தினராக வி.வி.வி. எஜுகேஷன் சொசைட்டி இயக்குனர் தன்வீர் அலிகான் கலந்து கொண்டு மாணவர்களுக்கு சீருடைகள், புத்தகப்பை உள்ளிட்டவைகள் அடங்கிய கல்வி உபகரணங்களை வழங்கி சிறப்புரையாற்றி பேசினார். முன்னதாக அனைவரையும் எம்.எஸ்.ஆர்.டி என்.ஜி.ஓ செயலர் முத்தமிழ்செல்வி வரவேற்றார். முடிவில், எஸ்தர் விஜயன் நன்றி கூறினார்.

# பெரியபாளையத்தில் வேர்ல்ட் டிரஸ்ட் மற்றும் லிட்டரஸி இண்டியா டிரஸ்ட் இணைந்து நடத்திய முப்பெரும் விழா

## தணிகை ரியல் எஸ்டேட் உரிமையாளர் எம்.ஆர்.தென்னரசு பங்கேற்பு





ஊத்துக்கோட்டை, ஜன23–

திருவள்ளூர் மாவட்டம், எல்லாபுரம் ஒன்றியம், பெரியபாளையத்தில் உள்ள ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி வளாகத்தில் வேர்ல்ட் டிரஸ்ட் மற்றும் லிட்டரஸி இண்டியா டிரஸ்ட் இணைந்து முப்பெரும் விழா நிகழ்ச்சியை நடத்தினர்.

இதில், முதியோர் கல்வி கற்கும் பத்து நபர்களுக்கு தையல் இயந்திரங்கள் வழங்குதல், முதியோர்களுக்கு கல்வி கற்பிக்கும் பத்து ஆசிரியர்களை கௌரவித்து நினைவு பரிசு வழங்குதல்,21 தூய்மை பணியாளர்களுக்கு பெட்ஷீட், குடை, மரக்கன்றுகள் உள்ளிட்டவை அடங்கிய நலத்திட்ட உதவி வழங்குதல் என முப்பெரும் விழா நிகழ்ச்சிகள் நடைபெற்றது. இந்நிகழ்ச்சிகளுக்கு, வேர்ல்ட் டிரஸ்ட் இயக்குனர் டாக்டர் பி.ஜெயஸ்ரீ பரசுராமன் தலைமை தாங்கினார்.

அனைவரையும் பெரியபாளையம் அரசினர் மேல்நிலைப் பள்ளியின் முன்னாள் பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர் ஜி.டி.வேலுமயில் வரவேற்றார். பெரியபாளையம் அரசினர் மேல்நிலைப் பள்ளியின் பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர் ஐ.ஏழுமலை, பெரியபாளையம் கே.நந்தன், கவிஞர் திராவிடமூர்த்தி, ஜி.ரஜினாமேரி ஆகியோர் முன்னிலை வகித்தனர். லிட்டரஸி இண்டியா டிரஸ்ட் சார்பாக முதியோர் கல்வி கற்கும் பத்து நபர்களுக்கு தையல் இயந்திரங்களை சென்னை எம்.கே.பி நகரில் இயங்கி வரும் தணிகை ரியல் எஸ்டேட் உரிமையாளர் எம்.ஆர்.தென்னரசு சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு பயனாளிகளுக்கு தையல் இயந்திரங்களை வழங்கி சிறப்புரையாற்றி பேசினார்.

இதன் பின்னர், முதியோர்களுக்கு கல்வி கற்பிக்கும் பத்து ஆசிரியர்களை கௌரவிக்கும் வகையில் புத்தகம், தட்டு உள்ளிட்டவை அடங்கிய நினைவு பரிசு வழங்கப்பட்டது. மேலும், 21 தூய்மை பணியாளர்களுக்கு பெட்ஷீட், குடை, மரக்கன்றுகள் உள்ளிட்டவைகளை நலத்திட்ட உதவியாக வழங்கினர்.

இந்நிகழ்ச்சியில், தொண்டு நிறுவனங்களின் கூட்டமைப்பு மாநில தலைவர் எ.குமார், திருவள்ளூர் மாவட்ட பொறுப்பாளர் ஆர்.ரமேஷ், எல்லாபுரம் ஒன்றிய துணைப் பெருந்தலைவர் வழக்கறிஞர் கே.சுரேஷ், ஓய்வு பெற்ற மின்வாரிய துறை அதிகாரி கவிஞர் ராமச்சந்திரன், நேதாஜி மக்கள் மன்ற தலைவர் டி.தேவராஜ், மின்வாரிய துறை அதிகாரி ஆர்.மகாலிங்கம், பெரியபாளையம் கே.சத்தியமூர்த்தி, தேர்வாய் திட்ட அலுவலர் கே.உதயகுமார், மாம்பாக்கம் திட்ட அலுவலர் கே.தேவி, வேர்ல்ட் டிரஸ்ட் செயலாளர் நவீன் குமார், தேமுதிக ஒன்றிய செயலாளர் சுகுமார் உள்ளிட்ட முக்கிய பிரமுகர் ஏராளமானோர் கலந்து கொண்டனர். முடிவில், பரசுராமன் நன்றி கூறினார்.

# அரியலூர் மாவட்டம் எம் ஆர் சி கல்லூரி நிறுவனர் நினைவு நாள் போட்டிகள்

அரியலூர் ஜன 23-

தத்தனூரில் எம் ஆர் சி கல்லூரி நிறுவனர் நினைவு நாள் போட்டிகள் நடைபெற்றது.

அரியலூர் மாவட்டம், உடையார்பாளையம் அருகே, தத்தனூர் மீனாட்சி இராமசாமி கல்வி நிறுவனங்களின் நிறுவனர், இராமசாமி முதலியார் 19 -ம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு, கல்லூரி வளாகத்தில், மாநில அளவில் பள்ளி மாணவ, மாணவியர்களுக்கான கபாடி, செஸ், ஆகிய விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றது.

போட்டிகளை, கல்லூரி தாளாளர் எம்.ஆர். இரகுநாதன், இயக்குநர்கள் இரா.இராஜமாணிக்கம், வை.தியாகராஜன் ஆலோசகர்கள், முதல்வர் மற்றும் துணை முதல்வர் ஆகியோர் முன்னிலை வகித்து துவங்கி வைத்தனர்.

அதைத் தொடர்ந்து 6,7,8 ஆம் வகுப்பு மற்றும் 9,10 ஆம் வகுப்பு மற்றும் 11,12 ஆம் வகுப்பு, ஆகிய நிலைகளின் அடிப்படையில், ஆண்கள் மற்றும் பெண்கள் என தனித்தனி பிரிவில் போட்டிகள் நடைபெற்றன.



இதில் மாநில அளவில் பல்வேறு பள்ளிகளில் இருந்து 600 மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டனர். 6,7,8 - 9,10- 11,12 ஆகிய வகுப்புகள் என தனித்தனியே முதல் பரிசு ரூபாய் 1000, இரண்டாம் பரிசு ரூபாய் 750, மூன்றாம் பரிசு ரூபாய் 500 என பரிசுகள் தனித்தனி பிரிவாக வழங்கப்பட்டன. சதுரங்க போட்டிக்கு கோப்பைகளும், சான்றிதழ்களும் பரிசாக வழங்கப்பட்டன.

வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு, கல்லூரி தாளாளர், இயக்குனர், ஆலோசகர், முதல்வர் ஆகியோர் பரிசுகளும் மற்றும் சான்றிதழ்களை வழங்கி பாராட்டு தெரிவித்தனர்.

விளையாட்டு போட்டிகளை உடற்கல்வியியல் துறை பேராசிரியர்கள் அன்பழகன், திருமுருகன், இராஜசுதாகர், ஜெயபால், கண்ணகி, சுரேஷ், சசிகுமார் பள்ளி ஆசிரியர்கள் வினோத், குமார், புஷ்பராஜ், ஆனந்த், வந்திய தேவன், வெங்கடேஷ் விஜயபாஸ்கர், பிரவீன், பிரபு, ஷாஇன்ஷா கார்த்திக்ராஜ், முருகன், ராஜேந்திரன் மற்றும் அரியலூர் மாவட்ட செஸ் அசோஷியேசன் பொறுப்பாளர்கள் நடத்தினர்.

இந்த போட்டிகளைசிறப்பாக நடத்திய அனைவருக்கும், அரியலூர் மாவட்ட செஸ் அசோசியேஷன் தலைவரும் எம் ஆர் கல்லூரியின் தாளாளருமாகிய எம் ஆர். இரகுநாதன் நன்றி தெரிவித்தார்.

# மதுரை,கிழக்கரையில் நாளை ஜல்லிக்கட்டு - 3,669 மாடுபிடி வீரர்கள்- 9,312 காளைகள் பதிவு

மதுரை: ஜன. 23,

மதுரை மாவட்டம் கீழக்கரையில் ரூ.44 கோடியில் பிரமாண்ட ஜல்லிக்கட்டு அரங்கம் அமைக்கப்பட்டுள்ளது.

ஜல்லிக்கட்டுக்கு உலகப்புகழ் பெற்ற மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் அருகேபிரமாண்ட ஜல்லிக்கட்டு அரங்கம் அமைக்கப்படும் என சட்டசபையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்து இருந்தார். இதனை தொடர்ந்து அலங்காநல்லூர் அருகே கீழக்கரை கிராமத்தில், வகுத்துமலை அடிவாரத்தில் ரூ.44 கோடியில் பிரமாண்ட ஜல்லிக்கட்டு அரங்கம் அமைக்கப்பட்டுள்ளது.

இதற்கான திறப்பு விழா நாளை நடக்கிறது. இதில் முதல்வர் மு.க.ஸ்டாலின்



கலந்து கொண்டு ஜல்லிக்கட்டு அரங்கத்தை திறந்து வைக்கிறார்.

அதன்பின்னர் அந்த அரங்கத்தில் ஜல்லிக்கட்டு போட்டி விமரிசையாக நடைபெற இருக்கிறது. அன்றைய தினம் நடைபெற இருக்கும் அந்த ஜல்லிக்கட்டு போட்டியில் ஆன்லைன் மூலம், 9,312 காளைகளும், 3,669 மாடுபிடி வீரர்களும் பதிவு செய்துள்ளனர். இதில் தகுதியான நபர்கள் மற்றும் காளைகள் தேர்வு செய்யப்பட்டு ஜல்லிக்கட்டு போட்டிக்கு அனுமதிக்கப்படுவார்கள் என அதிகாரிகள் தெரிவித்தனர். இது ஒரு புறம் இருக்க, நாளை ஜல்லிக்கட்டு போட்டிக்கான பணிகள், திறப்பு விழா ஏற்பாடுகள் மும்முரமாக நடந்து வருகின்றன. இதனை அதிகாரிகள் தொடர்ந்து கண்காணித்து வருகின்றனர்.

# புதுக்கோட்டையில் காங்கிரஸ் கட்சியினர் கண்டன ஆர்ப்பாட்டம்

புதுக்கோட்டை,ஜன.23-

புதுக்கோட்டை மாவட்ட காங்கிரஸ் கமிட்டி சார்பில் அசாம் மாநிலத்தில் ராகுல் காந்தியின் பாரத் ஜோடோ நியாய் யாத்திரையில் வன்முறையை தூண்டும் வகையில் நடந்த காங்கிரஸ் கட்சியினரையும், ராகுல் காந்தி பயணம் செய்த வாகனத்தை தாக்குதல் நடத்திய அசாம் மாநில பா ஜ க வின் செயலையும், அசாம் மாநில முதல்வர் ஹேமந்த் பிஸ்வா சர்மாவை பதவி விலகக் கோரியும் புதுக்கோட்டை தலைமை தபால் நிலையம் முன்பு மாவட்ட காங்கிரஸ் கட்சியின் தலைவர் முருகேசன் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இதில் மாவட்ட துணைத் தலைவர் அரிமளம் இராமநாதன், தனபதி, மாநில சிறுபான்மை பிரிவு துணைத்



தலைவர் இப்ராஹீம் பாபு, வட்டாரத் தலைவர் சூர்யா பழனியப்பன் ஆகியோர் கண்டன ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்., இதில் மத்திய பா ஜ க மோடி அரசு அசாம் மாநில அரசு மற்றும் பா ஜ க வினரை கண்டித்தும் கோஷமிட்டனர்.

இந்நிகழ்ச்சியில் ராஜா முகமது, மாமுண்டி, நகரத் தலைவர் பாருக் ஜெய்லானி, ஒன்றிய கவுன்சிலர் துரைக்கண்ணன், காதர் மைதீன், மாவட்ட கலைப் பிரிவு தலைவர் மேப் வீரையா, சிவக்குமார், வட்டாரத் தலைவர்கள் அன்னவாசல் சுப்பிரமணியன், குன்றாண்டார்கோவில் வீ. சா. இ. விஜி, கறம்பக்குடி தங்கசிவா, கீரனூர் நகரத் தலைவர் பாஸ்கர், திரவிய ராஜ், மகளிர் அணி கவுரி, சசிகலா, சேங்கத்தோப்பு ஆறுமுகம் ,மகாலிங்கம் ,முத்து விஜயன், மணி ,எம் ஏ கேசேட், அருள் முருகன், ஜெய வடிவேல் உள்பட ஏராளமான காங்கிரஸ் கட்சியினர் கலந்து கொண்டனர்.

# திருமயம் அருகே கோட்டூர் அய்யனார் கோயில் கும்பாபிஷேகம் விமர்சையாக நடைபெற்றது

திருமயம்: ஜன, 23

புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் அருகே அய்யனார் திருக்கோயில் மகாகும்பாபிஷேகம் விமர்சையாக நடைபெற்றது. மங்கல இசையுடன் தொடங்கிய கும்பாபிஷேக விழாவில் தொடர்ந்து கணபதி ஹோமம், கோபூஜை, வாஸ்து சாந்தி, ரக்ஷாபந்தனம், பூர்ணாகுதி, உள்ளிட்ட பல்வேறு பூஜைகள் நடைபெற்றன. அதனைத்தொடர்ந்து முதலாம், இரண்டாம், மூன்றாம் கால யாகசாலை பூஜைகள் நடைபெற்றன.

பல்வேறு புனிதத் தலங்களில் இருந்து கொண்டுவரப்பட்ட புனிதநீர் பல்வேறு கலசங்களில் அடைக்கப்பட்டு யாகசாலையில் சிவாச்சாரியார் வேத



மந்திரங்கள் முழங்க பூஜிக்கப்பட்டது. இவ்வாறு பூஜிக்கப்பட்ட புனிதநீர் கலசங்களை மங்கல இசை முழங்க சிவாச்சாரியார்கள் தலையில் சுமந்து வந்து கோவிலை வலம் வந்தனர். கருடபகவான் விமானத்தை சுற்றி வர பூஜிக்கப்பட்ட புனித நீர் விமானத்தில் ஊற்றப்பட்டது. மேலும் பரிவார தெய்வங்களான அடைக்கலம் காத்தார், வல்லடியான், பெரியகருப்பன், சின்னகருப்பர், காளி அம்மன் ஆகிய தெய்வங்களுக்கு சிறப்பு அபிஷேகங்கள் நடைபெற்றது. கும்பாபிஷேக விழாவில் கலந்து கொண்ட பக்தர்களுக்கு அருட்பிரசாதம் மற்றும் அன்னதானம் வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் சுற்றுவட்டார பகுதிகளில் இருந்து நூற்றுக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

# டிஜிட்டல் பண பரிவர்த்தனைகளில் இந்தியர்கள் தான் பெஸ்ட்

## வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர்

நைஜீரியா, ஜன,23

அமெரிக்காவில் 3 ஆண்டுகளில் மேற்கொள்ளப்படும் டிஜிட்டல் பண பரிவர்த்தனைகளை, இந்தியர்கள் ஒரே மாதத்தில் செய்வதாக வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

நைஜீரியா நாட்டிற்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் சுப்பிரமணியம், ஜனவரி 21-ம் தேதி முதல் 23-ம் தேதி வரை பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்று வருகிறார்.

இந்திய-நைஜீரிய கூட்டு சந்திப்பில் பங்கேற்கும் அவர், நைஜீரிய நாட்டு வெளியுறவுத் துறை அமைச்சருடன் உரையாற்ற உள்ளார். முன்னதாக உகாண்டா நாட்டில் நடைபெற்ற அணி சேரா நாடுகள் மாநாட்டில் பங்கேற்று அவர் உரையாற்றி இருந்தார்.

அப்போது ஐ.நா பொதுச் செயலாளர் ஆண்டோனியோ குட்டேரஸ் உள்ளிட்ட வெளிநாட்டு தலைவர்களையும் அவர் சந்தித்து பேசினார். இந்த நிலையில் நைஜீரிய வாழ் இந்தியர்களுடனான சந்திப்புநிகழ்ச்சியில்பேசிய அவர், "இந்தியர்களின் வாழ்க்கை முறையை தொழில்நுட்பம்வாயிலாக எளிமைப்படுத்தி இருக்கிறோம். இன்றைய சூழலில் மிகவும் குறைவானவர்களே பணத்தை நேரடியாக



பயன்படுத்தி பரிவர்த்தனைகள் மேற்கொள்கின்றனர்.

அந்த வகையில் அமெரிக்காவில் 3 ஆண்டுகளில் மேற்கொள்ளப்படும் டிஜிட்டல் பண பரிவர்த்தனைகளை, இந்தியர்கள் வெறும் ஒரே மாதத்தில் செய்து விடுகின்றனர். கொரோனா தொற்று உருவானபோது இந்தியா இதிலிருந்து மீண்டு வருவது சிரமமானது என பலரும் கணிப்பு தெரிவித்தனர். ஆனால் இரண்டு ஆண்டுகள் கழித்து, கொரோனா அலைகள், லாக்டவுன்கள் எல்லாவற்றையும் தாண்டி, உலகம்முழுவதும் உள்ள மக்களுக்காக மருந்துகளைத்தயாரிக்கும் பணியை இந்தியா மேற்கொண்டது" என்று தெரிவித்தார்.

மேலும், "உலகிலேயே மிகவும் வேகமாக வளரும் பொருளாதாரம் உள்ள நாடு இந்தியா தான். இந்தியாவில் எங்கு சென்றாலும்பொருளாதார நடவடிக்கைகள் தொடர்வதை உங்களால் பார்க்கமுடியும். மெட்ரோ ரயில் நிலையங்கள், சாலைகள், புதிய விமான நிலையங்கள், புதிய ரயில் சேவைகள், ரயில் நிலையங்கள் ஆகியவை வந்து கொண்டே இருக்கின்றன என தெரிவித்தார்.

# ஆலங்குடி அருகே அரசு தொடக்கப் பள்ளியில் மாணவர் சேர்க்கை விழிப்புணர்வு பேரணி




ஆலங்குடி, ஜன.23-

புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி தாலுகா வடகாடு ஊராட்சியில் உள்ள புள்ளாச்சி குடியிருப்பு ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியானது நவீன தொழில்நுட்ப வசதிகளைக் கொண்ட முன்மாதிரி பள்ளிகளில் ஒன்றாக செயல்பட்டு வருகிறது, இப்பள்ளியில் மாணவர் சேர்க்கை விழிப்புணர்வு பேரணி நேற்று நடைபெற்றது.

இப்பேரணிக்கு பள்ளியின் தலைமை ஆசிரியர் வளர்மதி தலைமை வகித்தார், இடைநிலை ஆசிரியர் மரிய விமலா ஜான்சிராணி ஆகியோர் முன்னிலை வகித்தனர் பள்ளியில் தொடங்கிய பேரணியானது மல்லிகை புஞ்சை, புள்ளாச்சிகுடியிருப்பு, கடை வீதி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளுக்கு சென்றுமீண்டும்பள்ளியை அடைந்தது. அப்போது, 'பள்ளி வயதுக்குட்பட்ட மாணவர்களை பள்ளியில் சேர்ப்போம், தொடர்ந்து கற்போம்' என்பன உள்ளிட்ட வாசகங்களை முழக்கங்களாக மாணவர்கள் எழுப்பினர், இந்த பேரணியில் பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.

# உத்தரப்பிரதேசம் பட்டாசு கடையில் தீ விபத்து : சிறுவர்கள் பலி

உத்தரபிரதேசம் , ஜன,23

உத்தரபிரதேச மாநிலம் கெல்வாடா கிராமத்தில் உள்ள வீட்டின் மேல்மாடியில் பட்டாசுக் கடை ஒன்று செயல்பட்டு வந்தது, இந்த கடையில் நேற்று தீடிரென வெடி விபத்து ஏற்பட்டது. இந்த விபத்தின் போது அங்கு வேலை செய்து கொண்டிருந்த ஹிமான்சு என்கின்ற 12 வயது சிறுமியும், பராசு என்ற 14 வயது சிறுவனும் உயிரிழந்தனர். மேலும் ஒருவர் படுகாயமடைந்த நிலையில், மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு வந்த தீயணைப்புதுறை மற்றும்



காவல் துறையினர் உயிரிழந்த சிறுவர்களின் உடலைகைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர்.

இச்சம்பவம் குறித்து வழக்குப்பதிவு செய்த போலீசார், வீட்டின் உரிமையாளர் ஷதாப் மீது வழக்குப்பதிவு செய்து, விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# கடையநல்லூரில் அயோத்தி ராமர் கோவில் திறப்பு விழாவையொட்டி ஆஞ்சநேயர் கோயிலில் சிறப்பு வழிபாடு

தென்காசி,ஜன.23-

தென்காசி மாவட்டம் கடையநல்லூர் கிருஷ்ணாபுரத்தில், உலக நாடுகள் பெரிதும் எதிர்பார்த்த அயோத்தி ராமர் கோவில் திறப்பு விழா மற்றும் ராமர் சிலை பிரதிஷ்டை நடைபெற்றதை முன்னிட்டும் வரலாற்று சிறப்புமிக்க இந்நிகழ்வுக்கு காரணமான பாரத பிரதமர் நரேந்திர மோடிக்கு நன்றிகளையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொண்டு கிருஷ்ணாபுரம் ஸ்ரீ ஆஞ்சநேயர் கோயிலில் சிறப்பு யாக பூஜை வழிபாடுகளும் பஜனைகளும் நடைபெற்றது.



இந்நிகழ்ச்சியில் பரம்பரை அறங்காவலர் குழு மீனாடி.பட்டாச்சார்யா, எம். ராதாகிருஷ்ணன், இ. சிவகுமார், ஆர். பாலசுப்பிரமணியன், ஆய்க்குடி குமார் , அகில பாரதிய சன்னியாசிகள் சங்கம், ஸ்ரீ முண்டக்கண்ணி அம்மன் சக்தி பீட அறக்கட்டளை, பி.கே.எஸ்.வி. ரேவதி பாலீஸ்வரன் கடையநல்லூர் 1-வது வார்டுநகர்மன்றஉறுப்பினர், சங்கரநாராயணன் முத்துகிருஷ்ணாபுரம் நகர்மன்ற உறுப்பினர், கடையநல்லூர் பிஜேபி நகரத் தலைவர் சுப்பிரமணியன், மற்றும் பாலீஸ்வரன் பிஜேபி மாவட்ட நிர்வாகி மற்றும் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு அன்னதானம் வழங்கி விழாவை சிறப்பித்தனர்.

# இங்கிலாந்துக்கு எதிரான 2 டெஸ்ட் போட்டிகளில் இருந்து விராட் கோலி விலகல்

டெல்லி, ஜன,23

இந்திய கிரிக்கெட் அணியின் நட்சத்திர பேட்ஸ்மேன் விராட்கோலி. ஒருநாள் உலகக்கோப்பை கிரிக்கெட் தொடர் முடிந்த நிலையில், சிறிய ஓய்வுக்கு பிறகு தென்னாப்பிரிக்க அணிக்கு எதிரான டெஸ்ட் தொடர் மூலம் மீண்டும் அணிக்கு திரும்பினார்.

அதனைத்தொடர்ந்து, இந்திய அணி இங்கிலாந்து அணியுடன் 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் ஆட உள்ளது. இங்கிலாந்து அணி இதற்காக இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டது. இதில் முதல் டெஸ்ட் போட்டி ஜன.25 ஆம் தேதி ஹைதராபாத்தில் தொடங்குகிறது. இந்த நிலையில் முதல் இரண்டு டெஸ்ட் போட்டிகளில் பங்கேற்கவில்லை என விராட் கோலி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து இந்திய அணி நிர்வாகத்திடம் அவர் கூறியதாவது, " நாட்டிற்காக எப்போதும் விளையாடுவது தான் என்னுடைய பணி. இருப்பினும் சில தனிப்பட்ட காரணங்களுக்காக இந்த முடிவை எடுத்துள்ளேன்" எனக் கூறியுள்ளார். விராட் கோலியின் இந்த முடிவிற்கு இந்திய அணி நிர்வாகம் ஒப்புதல் அளித்துள்ளது.

# தென்காசி வடக்கு மாவட்ட அதிமுக சார்பில் முன்னாள் முதல்வர் எம்ஜிஆரின் 107-வது பிறந்தநாள் விழா பொதுக்கூட்டம்

தென்காசி,ஜன.23-

தென்காசி மாவட்டம் தென்காசி வடக்கு மாவட்ட அதிமுக சார்பில் முன்னாள் முதல்வர் எம்ஜிஆரின் 107-வது பிறந்தநாள் விழா பொதுக்கூட்டம் மேல கடையநல்லூர் தேரடி திடலில் நடைபெற்றது. தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் கிருஷ்ண முரளி குட்டியப்பா எம்எல்ஏ தலைமை வைகித்தார், மாவட்ட துணைச் செயலாளர் பொய்கை சோ. மாரியப்பன், சண்முகப்பிரியா, மாவட்டப் பொருளாளர் சண்முகையா, பொதுக்குழு உறுப்பினர் முருகையா, காளிராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நகரச் செயலாளர் எம். கே. முருகன் வரவேற்றார், கூட்டத்தில் மாநில அமைப்புச் செயலாளரும், முன்னாள் அமைச்சருமான அன்வர் ராஜா, மாவட்டச் செயலாளர் கிருஷ்ண முரளி குட்டியப்பா எம்எல்ஏ, ராஜலட்சுமி, சம்சு கனி, சத்யகலா தீபக் ஆகியோர் உரையாற்றினர்,



நிகழ்ச்சியில் தகவல் தொழில்நுட்ப அணி மண்டல செயலாளர் சிவ ஆனந்த், மாவட்ட சார்பணி நிர்வாகிகள் கண்ணன், பரமகுருநாதன், ஒன்றியச் செயலாளர் வசந்த முத்துப்பாண்டி, ஜெயக்குமார், செல்லப்பன், ராமச்சந்திரன், ரமேஷ், வேல்முருகன், நகரச் செயலாளர் கணேசன், ஆறுமுகம், பேரூர் செயலாளர்கள் சுசீகரன், நல்லமுத்து, சார்புஅணி புகழேந்தி, ராசையா, அருள்ராஜ், கருப்பையா தாஸ், நாகூர் மீரான், அழகர்சாமி, சிங்காரவேலு, எஸ், எம், மைதீன் மாவட்ட வர்த்தக அணி பொருளாளர், ஜாகிர் உசேன், வெங்கடேஷ், ஞானராஜ், வக்கீல் சுப்பிரமணியன், அருண், அண்ணா தொழிற்சங்கம் கந்தசாமி பாண்டியன், ஆத்மநாதன், பாலசுப்பிரமணியன் விபத்து பிரிவு, மாநில பேச்சாளர் தீ கனல் லட்சுமணன், முத்தழகு ,ஒன்றிய இளைஞரணி இடைகால் செல்லப்பா, நகர எம் ஜி ஆர் மன்றம் முத்துகிருஷ்ணன், நகர இளைஞர் அணி செயலாளர் சுபா ராஜேந்திர பிரசாத், பால்பாண்டி, செங்கலமுடையார், வெங்கட், நடராஜ் உள்பட பலர் கலந்து கொண்டனர், முன்னாள் நகரச் செயலாளர் கிட்டு ராஜா நன்றி கூறி நிறைவு செய்தார்.

### நிலத்தை அபகரிக்க வேலி கற்களை சேதப்படுத்திய நபர் மீது

# நடவடிக்கை எடுக்க கோரி தமிழ் புலிகள் கட்சியினர் மாவட்ட ஆட்சியரிடம் கோரிக்கை மனு

தென்காசி,ஜன.23-

நிலத்தினை அபகரிக்க வேலி கற்களை அடித்து நொறுக்கி சேதப்படுத்தியும், தடுக்க சென்றவரை அடித்து உதைத்து கொலை மிரட்டல் விடுத்த நபர்கள் மீதும், தூண்டிவிட்ட நபர் மீதும் நடவடிக்கை எடுக்கக்கோரி தமிழ் புலிகள் கட்சியின் சார்பில் அதன் மாவட்ட செயலாளர் சந்திரசேகர் தென்காசி மாவட்ட ஆட்சியர் துரை ரவிச்சந்திரனிடம் கோரிக்கை மனுவினை அளித்தார், அந்த மனுவில் தெரிவித்திருப்பதாவது, எனது உறவினரான மேல கடையநல்லூர் சுப்பையா மகன் கோவிந்தன் மற்றும் நெடுவயலை சேர்ந்த உத்தமிநாதன் மனைவி மகாலட்சுமி இருவரும் பேட்டை கடையநல்லூர் புளியம்பட்டி தெருவை சேர்ந்த திவான் மைதீன் மகன் முகம்மது என்பவரிடம் கடந்த 15- 9- 2021-ல் தனித்தனியான கிரைய ஆவணங்கள் மூலம் நயினாகரம் கிராமம் அச்சம்பட்டியில் மொத்தம் சுமார் 42.5 சென்ட் நிலத்தை 2 கிரைய ஆவணங்கள் மூலம் கிரயம் பெற்று அனுபவித்து வருகிறார்.

மேற்படி மகாலட்சுமிக்கு




சொந்தமான நிலத்தில் முகம்மது சுமார் 7.5 செண்டை ஆக்கிரமிப்பு செய்து மோசடி பட்டாவினை உற்பத்தி செய்து கொண்டு பிற நபர்களுக்கு கள்ளத்தனமாக விற்பனை செய்ய மோசடி கிரைய ஆவணங்கள் உற்பத்தி செய்ய திட்டமிட்டு வந்ததை அடுத்து இடைகால் சார்பதிவாளரிடம் தடங்கல் மனு அளிக்கப்பட்டு நிலுவையில் உள்ளது, முகம்மது தன் வசம் உள்ள வெள்ளாங்குளம் சங்கரலிங்கம் மகன் மாரியப்பன் மங்களாபுரத்தைச் சேர்ந்த வேலு மகன் ராஜா, இடைகாலைச் சேர்ந்த மாடசாமி மகன் தங்கராஜ், ஆகிய மோசடி பேர்வழிகளை தூண்டி விட்டு மேற்படி மகாலட்சுமியின் நிலத்தில் போட்டிருந்த கம்பி முள்வேலியை அடித்து நொறுக்க செய்து சுமார் 20 ஆயிரத்துக்கும் மேல் பொருட்சேதத்தை ஏற்படுத்தியும், தடுக்கச் சென்ற கோவிந்தனை அந்த கும்பல்தகாத வார்த்தைகளால் கூறிஅடித்துஉதைத்துகொலை மிரட்டல் விடுத்துள்ளார்கள், படுகாயம் அடைந்த கோவிந்தன் தென்காசி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டுள்ள நிலையில் அவரிடம் புகார் வாக்குமூலம் பெற்று சென்ற காவல் துறையினர் மேற்படி நிலத்தின் முந்தைய உரிமையாளர் முகம்மது சமூகத்தில் நல்ல அந்தஸ்தில் இருப்பதால் இதுவரை உரிய நடவடிக்கை எடுக்காமல் காலம் தாழ்த்தி வருகின்றனர்.

மேற்படி கொலை வெறி கும்பல் மீதும், நிலத்தின் முந்தைய உரிமையாளர் முகம்மது மீதும் நில அபகரிப்பு உள்ளிட்ட பிரிவுகளின் கீழ் உரிய நடவடிக்கை எடுக்குமாறு அந்த மனுவில் குறிப்பிடப் பட்டுள்ளது.

PUDUGAI VARALARU - National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.

# அயோத்தி கும்பாபிஷேகம் ராமர் நிச்சயமாக மன்னிப்பார்





# செந்தில் பாலாஜி, ஜாமின் கோரி மீண்டும் சென்னை ஐகோர்ட்டில் மனு

# தமிழ்நாட்டில் 6.18 கோடி வாக்காளர்கள் இறுதி பட்டியல் வெளியீடு




| சென்னை / புதுக்கோட்டை | 23.01.2024 | varalaruu.com | பக்கம்:4 | ரூ.10 |
|---|---|---|---|---|

புதுகை வரலாறு நாளிதழ்

23.01.2024 செவ்வாய்

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

முத்து குமாரசுவாமி , இலங்கைத் தமிழ் அரசியல்வாதி, வழக்கறிஞர் (பி.1833) (இ.1879)



சுபாஷ் சந்திர போஸ் , இந்திய விடுதலைப் போராட்ட வீரர், அரசியல்வாதி (பி.1897) (இ.1945)



பால் தாக்கரே , இந்திய ஊடகவியலாளர், அரசியல்வாதி (பி.1926) (இ.2012)



ஆர். அனந்த கிருஷ்ணர் , ஆந்திர கருநாடக இசைக் கலைஞர் (பி.1893) (இ.1979)



## இன்றைய நினைவு நாள்

த. மு. சபாரத்தினம் , இலங்கைத் தமிழ் அரசியல்வாதி, சட்டவறிஞர் (பி.1895) (இ.1966)



அரியக்குடி இராமானுஜ ஐயங்கார் , கருநாடக இசை வித்துவான் (பி.1890) (இ.1967)



இரா. இளவரசு , தமிழகத் தமிழறிஞர், கல்வியாளர் (பி.1939) (இ.2015)



சுபாசு சந்திர போஸ் ஜெயந்தி (ஒடிசா, திரிபுரா, மேற்கு வங்காளம்)